ஏற்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும்கூட இந்த ஆண்டு 54 உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு, அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறது, நிதி வசதிகளைப் பொறுத்தும், மக்கள் தொகை மாணவ மாணவிகள் சேரும் நிலை, நெருக்கடி நிலைகள் இவற்றையெல்லாம் பொறுத்தும் இந்த ஆண்டு அதிகமான அளவிலே 54 உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. ப. முத்துசாமி : புதிதாக உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த வேண்டுமானால் அதற்காக மக்கள் கொடுக்கவேண்டிய பங்குத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, பள்ளி பராமரிப்புச் செலவுக்காக 10 ஆயிரம் ரூபாய், முன்பணமாகவும், 5 ஏக்கர் நிலமும் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும், அதோடு, கட்டடம் கட்டுவதற்கு 12,500 ரூபாய் ஈட்டு மானியமாகக் கொடுக்கவேண்டும், அப்படிக் கொடுத்தால் அதற்குப் பிறகு அரசாங்கம் அதற்குரிய தொகையைக் கொடுக்கும். தற்காலிகமாகப் பள்ளியை நடத்துவதற்கு வசதிகள் செய்துதர வேண்டும், வேறு எந்தப் பள்ளிக்கும் போட்டியாக இருக்கின்ற அளவிலே இருக்கக்கூடாது. இது எல்லாம் அரசாங்கத்தின் சார்பிலே பள்ளி அமைக்கப்படுவதற்கு வேண்டியவையாகும். தனியார்கள் அமைக்கவேண்டுமானால் வேறு எந்தப் பள்ளியும் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும், 1 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும், அதிலே முதலில் 50 ஆயிரம் ரூபாயும் பிறகு ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதமும் கொடுக்கவேண்டும். நிர்வாகத்தில் தேவைப்படும் பங்குத் தொகையும், பராமரிப்புச் செலவிற்காக 5 ஆயிரம் ரூபாய் ஆண்டிற்கும் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலேயும் இதைத்தவிர இன்னும் சில நிபந்தனைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

*306 வினா—**திரு. வெ. குருசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வாண்டு முதல் ஏற்படுத்தப்படும் ?

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

விசைப்படகுகள் ஒதுக்கீடு

* 307 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைப் படகு ஒதுக்கக் கோரி சென்ற ஆண்டில் எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?

(இ) எத்தனை பேருக்கு ஒதுக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) மீனவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் நடைமுறை 1968 முதல் நிறுத்தப்பட்டது. எனினும், அகதிகள் வேலையிழந்த பொற்கொல்லர்கள் ஆகியோரிடமிருந்து வரும் விண்ணப்பங்களைப் பதிவு செய்வதை அரசு அனுமதித்தது. அவ்வண்ணமே, 1971-72-ல் 6 விண்ணப்பங்கள் வரப்பெற்றன.

(இ) 1971-72-ல், 154 படகுகள் (32 அடி நீளமுள்ள 44 படகுகளும், 30 அடி நீளமுள்ள 110 படகுகளும்) அதே எண்ணிக்கையுள்ள மீனவர் தொகுதியினருக்கு வழங்கப்பட்டன.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எஞ்சியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு எப்பொழுது ஒதுக்கப்படும். இந்த ஆண்டு எப்பொழுது குலுக்கல் நடைபெறும் ? குலுக்கல் நடைபெறும் பொழுது எல்லா விண்ணப்பதாரர்களுடைய சீட்டுகளும் ஒன்றாகச் சேர்த்துக் குலுக்கல் நடைபெறுமா? அல்லது மாவட்ட வாரியாக வந்த விண்ணப்பங்களை வைத்துக் குலுக்கல் நடைபெறுமா என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இன்னமும் 1,193 படகுகள் வழங்கப்பட வேண்டியிருக்கின்றன பயிற்சி பெற்றவர்கள் பயிற்சி பெறாதவர்கள், வழங்கப்பட்ட இடம். வழங்கப்படாத இடம் என்ற அடிப்படையிலே விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பிறகுதான் இயக்குநர் அவர்கள் மாவட்டவாரியாக குலுக்கலை நடத்துகிறார்கள்.